# இயல் - 3

# இலக்கியத்தில் சடங்குகள்

பண்டைக் காலத்தில் மக்கள் தங்கள் வேலை நேரம் முடிந்த பின்னர், மாலை நேரங்களில் பொழுதுபோக்கு நிகழ்வுகளில் ஈடுபட்டனர். பொழுதுபோக்கு நிகழ்வுகளாகப் பலவற்றைப் பண்டைய இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன. பொழுதுபோக்கு நிகழ்வுகள் பெரும்பாலும் ஆண்களை மையமாகக் கொண்டவையாகவே விளங்குகின்றன. பெண்கள் தொடர்பான நிகழ்வுகள் பெரும்பாலும் இல்லம் சார்ந்தவையாகவும் இறைநம்பிக்கை சார்ந்தவையாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு பரம்பரை வழக்கமாகச் செய்து வரும் செயல்களே சடங்குகளாம். இந்தச் சடங்குகள் பற்றிய இலக்கிய ஆதாரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. சான்றோர் நெறியால் வழிவழி வரும் சடங்கு முறைகள் மூத்தோரால் இளையோர்க்கு அறிமுகம் செய்யப்பட்டவை ஆகும். வெறியாட்டு, விழா எடுத்தல் முதலியவற்றைத் தெய்வ வழிபாடுகளில் அவற்றைச் செய்வதற்குரிய வேலன், அந்தணர் முதலியோர் அவற்றை நிகழ்த்துகின்றனர்.

**சடங்குகள்**

சடங்கு என்பது சாஸ்திர விதி பற்றியும் வழக்கம் பற்றியும் அனுஷ்டிக்கும் கிரியை என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது. மக்கள் தங்கள் பிறப்புத் தொடங்கி இறப்பு வரையிலும் தாங்கள் செய்யும் பல்வேறு நிகழ்வுகளில் பல சடங்குகளைச் செய்கின்றனர் என்பதைப் பண்டைய இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன. இவ்விலக்கியங்களில் சடங்குகள் குறித்த பதிவுகளை ஆய்வதாக இவ்வியல் அமைகின்றது.

இறை வழிபாட்டுச் சடங்குகள்

இறை வழிபாட்டுச் சடங்குகளுள் இறை நம்பிக்கை சார்ந்த விழாக்களும் அடங்கும். அத்தகைய விழாக்களுள் ஒன்று திருவாதிரைத் திருநாள் ஆகும். திருவாதிரைத் திருநாளைப் பண்டைக் காலத்தில் தமிழர்கள் கொண்டாடிய விதத்தைப் பாரிபாடல் தொரிவிக்கிறது.

பனிப்படு பைதல் விதலைப் பருவத்து

ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து

மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை

விரிநூல் அந்தணர் விழவு தொடங்க 1

என்னும் அடிகளால் நூலறிவுமிக்க அந்தணர்களால் அந்தக் காலத்தில் பௌர்ணமி நாளாகிய திருவாதிரை நாளில் சிவபெருமானுக்கு விழா நடத்துதலை அறிய முடிகிறது.

பனி மிகுதலால் குளிரால் நடுங்குதலை உடைய முன்பனிப் பருவத்து ஞாயிறு தெறாத கடை மாரியையுடைய மார்கழி மாதத்துத் திங்கள் மறுவொடு நிறைந்த திருவாதிரை நாளின்கண் ஆகமங்களை உணர்ந்த பூசகர் திருவாதிரைக்குத் தெய்வமாகிய இறைவனுக்கு விழாவைத் தொடங்க எனப் பாரிமேலழகர் தரும் உரை இதனை விளக்குகிறது. ஆகமம் என்பவை இறை முறைமையை உணர்த்துபவை ஆகும். அந்த நெறியுணர்ந்தோரே விழாச் சடங்கு நடத்தியமை இதனால் தொரியவருகிறது.

‘முறைநற்கு அறியுநர் முன்னுறப் புகழ்ந்த

தூஇயல் கொள்கைத் துகளறு மகளிரொடு,

பருதி உருவின் பல்படைப் புரிசை

எருவை நுகர்ச்சி, யூப நெடுந்தூண்

வேத வேள்வித் தொழில் முடிந்ததூஉம் 2

வேள்விக்குரிய நடைமுறைமையை நன்றாக அறிந்த ஆன்றோர்கள் வேள்வியை நிகழ்த்தியிருக்கின்றனர். அந்த வேள்வியில் மன்னன் தமது குலமகளிரொடு பங்கேற்றான் என்பதை மேற்கண்ட பாடலடிகளால் அறிய முடிகிறது.

**பாவை நோன்பு**

பாவை நோன்பினைச் சங்க இலக்கியம் அம்பாவாடல் எனத் தொரிவித்துள்ளது. அழ்பாஆடல் என விரியும் அம்பாவாடல் என்னும் தொடாரில் அழகிய பாவையர் நீராடுதல் என்னும் பொருண்மை அடங்கியிருப்பதைக் காணமுடிகிறது. பிற்காலத்தில் தோன்றிய திருப்பாவையும் திருவெம்பாவையும் இந்தப் பாவை நோன்பினைத் தெளிவாக விளக்குகின்றன.

அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்

முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்

பனிப்புலர் பாடிப் பருமணல் அருவியின்

ஊதை ஊர்தர உறைசிறை வேதியர்

நெறிநிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பின்

தையல் மகளிர் ஈரணி புலர்த்தர

வையை! நினக்கு மடைவாய்த் தன்று

மையாடல் ஆடல் மழபுலவர் மாறெழுந்து

பொய்யாடல் ஆடும் புணர்ப்பின் அவரவர்

தீயொரிப் பாலும் செறிதவமுன் பற்றியோ

தாய் அருகா நின்று தவத்தை நீர் ஆடுதல் 3

மேற்காணும் பாடல் அடிகளில் பெண்கள் மார்கழி மாதத்தில் எவ்வாறு நோன்பு பூண்டு நீராட வேண்டும் என்பதை நீராடும் பெண்களின் தாயர் அருகில் நின்று நீராடல் முறைமையை விளக்கியுள்ளனர் என்னும் குறிப்புக் காணப்படுகிறது.

**வேண்டுதல் சடங்குகள்**

தெய்வத்திடம் அருள் வேண்டும் நோக்கத்தோடு செய்யப்படும் சடங்குகளை வேண்டுதல் சடங்கு என்பர். இந்த வேண்டுதல் சடங்குகளில் முதன்மையானதாகப் பூசை திகழ்கிறது. கன்னிப் பெண்கள் திருமணத்திற்காக வேண்டுதல், குழந்தைச் செல்வம் இல்லாதவர்கள் கருவுற வேண்டுதல் எனப் பல்வேறு காரணங்களுக்காக வேண்டுதல் சடங்கு செய்கின்றனர்.

**கருவுற வேண்டுதல்**

செல்வங்களுள் சிறந்த செல்வமாகப் பிள்ளைச் செல்வத்தை மக்கள் போற்றுகின்றனர்.

படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்

உடைப்பெருஞ் செல்வர் ஆயினும், இடைப்படக்

குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி,

இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்,

நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்,

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்

பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே 4

என்னும் புறநானூற்றுப் பாடல் அடிகள் குழந்தைப் பேற்றின் பெருமையையும் குழந்தைப்பேறு இல்லாமையின் இழிவையும் காட்டுகின்றன. எனவே எதிர்பார்க்கும் கால எல்லைக்குள் குழந்தைப்பேறு வாய்க்கப்பெறாத தாயர், இறை வேண்டுதலின் வாயிலாக அப்பேற்றினைப் பெற முயல்கின்றனர்.

‘கரு வயிறு உறுக எனக் கடம்படுவோரும்,

செய்பொருள் வாய்க்க எனச் செவிசார்த்து வோரும்

ஐஅமர் அடுகென அருச்சிப்போரும் 5

என்னும் அடிகளில் நெடுங்காலமாகப் பிள்ளைப்பேறு இல்லாதோர் ‘இனியேனும் எம் வயிற்றிடத்துக் கருப்பம் அடைவதாக“ என்று வேண்டிக் காணிக்கையாக இன்னது தருவோம் என்று கூறி வேண்டுதல் செய்வதைக் காணமுடிகிறது.

குழந்தைச் செல்வத்தை ஆண் குழந்தைச் செல்வம், பெண் குழந்தைச் செல்வம் என்று பகுத்துக்காணும் இயல்பு பண்டைக்காலம் முதலே இருந்துள்ளது. குறவன் ஒருவன் பெண் குழந்தை வேண்டும் என்று வேண்டுதல் சடங்கு நிகழ்த்தியதை,

குன்றக் குறவன் கடவுள் பேணி

இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள் 6

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல் அடிகளில் இறை வேண்டுதல் வாயிலாகப் பெற்ற பெண்குழந்தையின் பெருமையைக் காணமுடிகிறது.

வேண்டுதல் விழா

இறைவனிடம் வேண்டுதல் நிகழ்த்தும் காட்சி ஒன்றை மதுரைக்காஞ்சி காட்சிப்படுத்தியுள்ளது.

திவவு மெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணி,

குரல் புணர் நல்யாழ் முழவோ டொன்றி,

நுண்ணீ ராகுளி இரட்டப், பலவுடன்,

ஒண்சுடர் விளக்க முந்துற மடையொடு,

நன்மா மயிலின் மென்மெல இயலிக்,

கடுஞ்சூன் மகளிர் பேணி, கைதொழுது,

பெருந்தோட் சாலினி மடுப்ப 7

கருவுற்ற பெண்கள் தாங்கள் நல்ல முறையில் குழந்தையைப் பெற வேண்டும் என்னும் வேண்டுதலை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தும் சடங்கினை விழாவாகக் கொண்டாடியுள்ளனர். பாடல், யாழிசை, முழவொலி ஆகியவற்றின் முழக்கத்தோடு பல்வேறு விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்ட இறை முற்றத்தில் பாற்சோறு படைத்துள்ளனர். அவ்வேளையில் எந்தத் தெய்வத்திற்குப் பாற்சோறு படைக்கப்பட்டதோ அத்தெய்வம் சாலினியின் மேல் வந்து அருள் வாக்கு வழங்கியதையும் மேற்காணும் மதுரைக் காஞ்சி அடிகள் உணர்த்துகின்றன.

பிள்ளைப்பேற்றுச் சடங்குகள்

பண்டைக் காலத்தில் கருவுற்ற பெண்கள், பிள்ளைப்பேறு நல்ல முறையில் நிகழ்வதற்காக இறைவனை வேண்டியுள்ளனர். மேலும் அது தொடர்பாகப் பல சடங்குகளை நிகழ்த்தியுள்ளனர் என்பதை,

கடும்புடைக் கடுஞ்சூல் நம் குடிக்கு உதவி

நெய்யொடு இமைக்கும் ஐயவித் திரள் காழ்

விளங்கு நகர் விளங்கக் கிடந்தோள் 8

என்னும் நற்றிணைப் பாடல் அடிகளில் தெய்வம் குழந்தைப்பேற்றை வழங்கிய தன்மை காட்டப்பட்டுள்ளது. பெண் குழந்தை, ஆண் குழந்தை என்னும் பிரிவில் இங்கே ஆண்குழந்தைப்பேறு பெருமையாகக் காட்டப்பட்டுள்ளது. 'நம் குடிக்கு உதவி" என்னும் தொடரால் குடியினை விளங்கச் செய்யும் குழந்தைப்பேறு என்பது உணர்த்தப்படுகிறது. எனவே இதனை ஆண் குழந்தைப்பேறு எனக் கருதலாம். மேலும் குழந்தைப்பேறு வாய்க்கப்பெற்றவுடன் அப்பெண்ணை அணங்குகள் எதுவும் தீண்டாமல் இருக்க வேண்டும் என்று நெய்யோடு கடுகைக் கலந்து வீட்டின் வெளிப்புறச் சுவாரில் அப்பி வைத்துள்ளனர். இவ்வாறு பேய் அண்டாமல் காப்பதற்காகக் கடுகினை அப்பி வைக்கும் நிகழ்வும் பிள்ளைப்பேற்றுச் சடங்குகளின் ஒருபகுதியாக பண்டைக் காலத்தில் அமைந்துள்ளது.

**நீராடல் சடங்கு**

பிள்ளையைப் பெற்றெடுத்த தாய்க்குப் பல்வேறு மணப்பொருட்களுடன் கூடிய நறுமணப் புகையைக் காட்டியுள்ளனர் என்பதனைப் பின்வரும் நற்றிணை அடிகள் காட்டுகின்றன.

நெய்யும் குய்யும் ஆடி, மையொடு

மாசுபட் டன்றே கலிங்கமும் தோளும்,

திதலை மென்முலைத் தீம்பால் பிலிற்றப்,

புதல்வற் புல்லிப் புனிறு நாறும்மே 9

மேலும் குழந்தையைப் பெற்ற பெண்ணை அதிகாலையில் இருள் விலகுவதற்கு முன்பே குளத்தில் நீராடுவதற்காக அழைத்துச் செல்வர். அதனை ஒரு சடங்காகவே நிகழ்த்தியுள்ளனர் என அறிய முடிகிறது. இதனைப் பின்வரும் மதுரைக் காஞ்சி அடிகள் காட்டுகின்றன.

கணவ ருவப்பப் புதல்வர்ப் பயந்து

பணைத்தேந் திளமுலை அமுதம் ஊறப்,

புலவுப்புனிறு தீர்ந்து, பொலிந்த சுற்றமொடு

வளமனை மகளிர் குளநீர் அயர 10

என்னும் அடிகள் வாயிலாகப் பிள்ளைப்பேறு நிறைவுபெற்றதும் அந்தப் பெண்ணை நீராட்டும் மரபிற்கேற்பக் குளத்து நீரில் நீராட்டியிருக்கின்றனர் என அறிய முடிகிறது.

**விரிச்சி கேட்டல்**

விரிச்சி கேட்டல் என்பது நற்சொல் கேட்டல் என்னும் பொருண்மை உடையது. குழந்தைப்பேறு காலத்தில் தலைவன் பரத்தையரோடு தொடர்புகொண்டு சென்றுவிட்டான். தனக்கு மகன் பிறந்து விட்டான் என அறிந்ததும் அவன் பரத்தையரை நீங்கி இல்லத்திற்குத் திரும்புவான் அவ்வாறு திரும்பாதபோது விரிச்சி கேட்டல் என்னும் நிகழ்வு சடங்காகவே நிகழ்கிறது. இதனையும் இதனோடு தொடர்புடைய பிறவற்றையும் பின்வரும் நற்றிணைப் பாடல் தொரிவிக்கிறது.

நெடுநா ஒள் மணி கடிமனை இரட்டக்,

குரைஇலைப் போகிய விரவு மணற் பந்தர்ப்,

பெரும்பாண் காவல் பூண்டென, ஒருசார்,

திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப,

வெறிஉற விரிந்த அறுவை மெல்லணைப்

புனிறுநாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச,

ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்

பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்

சீர்கெழு மடந்தை ஈர் - இமை பொருந்த

நள்ளென் கங்குல், கள்ளன் போல,

அகன்துறை ஊரனும் வந்தனன் -

சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே! 11

புதல்வன் பிறந்தவுடன் அவன் முகத்தைத் தந்தை பார்த்து மகிழ வேண்டும் என்பது தரும நூல் விதி என்பர். அதியமான் தனக்கு மகன் பிறந்ததை அறிந்து வந்து காண்கின்றான். அப்பொழுதும் அவன் பகைவர்மேற் கொண்ட சினம் தணிந்திலன் என்று ஔவையார் குறிப்பிடுகிறார்.

செறுவர் நோக்கிய கண்தன்

சிறுவனை நோக்கியும் சிவப்பு ஆனாவே 12

என்பது ஔவை வாக்கு, ஒருவன் பெறும் பேறுகளுள் மக்கட்பேற்றின் பெரும்பேறு வேறு இல்லை என்று அறிவோர் கொண்டனர்.

குழந்தைக்குப் பெயாரிடுதல்

குழந்தைக்குப் பெயாரிடுவது பண்டைக்காலம் முதலே ஒரு சடங்காக நிகழ்ந்துள்ளது. அவ்வாறு பெயாரிடும் போது தம் தந்தையின் பெயரையே புதல்வனுக்கு இடுவது மரபு.

அகன் பெருஞ் சிறப்பின் தந்தை பெயரன் 13

என்னும் அடியும்

முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற

புதல்வற் புல்லிப் பொய்த்துயில் துஞ்சும் 14

என்னும் அடிகளும்

மேதக்க எந்தை பெயரனை யாம் கொள்வேம் 15

என்னும் அடியும் இந்த மரபினை உணர்த்துகின்றன.

இன்மைதீர வந்தனென் வென்வேல்

உருவப் ப∴றேர் இளையோன் சிறுவன்

முருகற் சீற்றத் துருகெழு குருசில்

தாய்வயிற் றிருந்து தாய மெய்தி 16

என்னும் அடிகளில் காரிகால் பெருவளத்தான் தாய் வயிற்றிலிருக்கும் போதே சோழப்பேரரசின் அரசுரிமையைப் பெற்றான் என அறிய முடிகிறது. இப்பாடல் அடிகளில் இடம்பெற்றுள்ள தாயம் என்னும் சொல் வழிவழியாகப் பெறப்படும் அரசுரிமையை உணர்த்துகிறது. எனவே தாத்தனின் பெயர், பெயரனுக்கு உரிமையாவதுடன் தாத்தனின் அரசுரிமையும் தந்தைவழியாகப் பெயரனுக்கு வந்து சேர்கிறது என அறிய முடிகிறது.

புலிப்பல் தாலி

புலியின் பல்லை அணிகலன்களுடன் சேர்த்து அணிவிக்கும் மரபு பண்டைக் காலத்தில் இருந்துள்ளது. அவ்வகையில் புலிப்பல்லினைச் சிறுவர்களுக்கும் சிறுமியர்க்கும் அணிவித்துள்ளனர். சிறுவர் புலிப்பல் தாலி அணிந்த தன்மையை,

புலிப்பற் றாலிப் புன்றலைச் சிறா அர் 17

என்னும் புறநானூற்று அடி தொரிவிக்கிறது.

புலிப்பல் தாலிப் புதல்வற் புல்லி,

அன்னாய்! என்னும் அன்னையும் அன்னோ! 18

என்னும் குறுந்தொகை அடியாலும் சிறுவர் அணிந்த புலிப்பல் தாலியை அறிய முடிகிறது.

----------------- பொன்னொடு

புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி

ஒலிக்குழைச் செயலை உடைமாண் அல்குல்,

ஆய்சுளைப் பலவின் மேய்கலை உதிர்த்த

துயத்தலை வெண்காழ் பெறூஉம்

நல்கெழு சிறுகுடிக் கானவன் மகளே! 19

என்னும் அகநானூற்று அடிகள் வாயிலாக அறிய முடிகிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் இளம் பருவத்தில் ஏழுபேரைப் போரில் வெற்றி கொண்டான். அந்த வெற்றியைச் சிறப்பித்து இடைக்குன்றூர் கிழார் பின்வரும் பாடலில் பாடியுள்ளார்.

கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்

குடுமி களைந்தநுதல் வேம்பின் ஒண்தளிர்

நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து,

குறுந்தொடி பழித்தகைச் சாபம் பற்றி,

நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்

யார் கொல்? வாழ்க, அவன் கண்ணி தார்பூண்டு,

தாலி களைந்தன்றும் இலனே பால்விட்டு

அயினியும் இன்றுஅயின் றனனே 20

இந்தப் பாடலில் பாண்டியன் நெடுஞ்செழியனின் தோற்றத்தைக் காட்டுமிடத்தில் இடைக்குன்றூர் கிழார் அவனது குடுமியையும் சலங்கை அணிந்த காலையும் வளையல் அணிந்த கையையும் காட்சிப்படுத்தியுள்ளார். மேலும் இளமையில் இறைவன் காக்க வேண்டும் என்னும் நோக்கில் கழுத்தில் அணியப்பெற்ற தாலியும் அகற்றப்பெறாமல் அப்படியே இருந்ததாகத் தொிவித்துள்ளார்.

சிறுவர் நிலையைக் கடந்து இளையோர் பருவத்தை அடையும் போது சலங்கை, வளையல், தாலி ஆகியவற்றை அகற்றும் சடங்கு அந்தக் காலத்தில் நடைபெற்றுள்ளது. பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அந்தச் சடங்கு நிகழாததால் அவன் சிறுவன் என்னும் நிலையிலேயே காணப்பட்டுள்ளான் என்பதனை இந்தப் பாடல் உணர்த்துகிறது.

இடபப்பூணும் அரையில் அணிவர். அதனோடு வெட்டாத வாளும் மழுவும் இரண்டு புறத்தும் கட்டப்பட்டிருக்கும். இடையேயுள்ள இடபப்பூண் தம்பலப் பூச்சியின் நிறம் போன்று பவளத்தால் செய்யப்பட்டிருக்கும். இதனைப் பின்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

பூண்டவை எறியா வாளும் எற்றா மழுவும்

செறியக்கட்டி, ஈர் இடைத் தாழ்ந்த

பெய் புல மூதாய்ப் புகர் நிறத்துகிரின்

மை அற விளங்கிய ஆன் ஏற்று அவிர் பூண் 21

என்னும் அடி வாயிலாக இடபப்பூண் அணியப் பெற்றதை அறிய முடிகிறது.

குழந்தை பேணலில் இறை நம்பிக்கை

குழந்தைகளின் தளர் நடை கண்டும், மழலைச் சொற்களைக் கேட்டும், குழந்தையின் பெற்றோர் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றனர் அம்புலி காட்டி மகிழ்விக்கின்றனர். உணவினை ஊட்டும் போதும் நிலாவினைக் காட்டி ஊட்டுகின்றனர்.

கிளர்மணி ஆர்ப்ப ஆர்ப்பச் சா அய்ச் சாய்ச் செல்லும்

தளர் நடை காண்டல் இனிது 22

என்னும் அடிகளும்

ஐய! காமரு நோக்கினை, ‘அத்தத்தா“ என்னும் நின்

தேமொழி கேட்டல் இனிது 23

என்னும் அடிகளும்

ஐய! திங்கட் குழவி, வருக! என யான் நின்னை

அம்புலி காட்டல் இனிது 24

என்னும் அடிகளும் குழந்தையின் செயல்களைப் பார்த்து பெற்றோர் மகிழ்வதைக் குறிக்கின்றன.

குழந்தைக்கு நல்ல அழகிய ஆடை அணிதல், அதன் மேல் அரையில் விளங்கும்படி பொற்காசும் மணிக்காசுகளும் கோத்த அரைஞாண் சிறந்த பவள வடம், கையில் வளை மார்பில் முத்தும் பிற மணிகளும் சேரக் கோத்து அமைந்த மூன்று வடம். இங்ஙனமாகப் பல அணிகலன்களும் பூண்டு ஆண்மகவோ தன்னொடு ஒத்த சிறுவர்களுடன் சிறுதேர் உருட்டித் தெருவில் விளையாடச் செல்கின்றது. பெண்மகவோ பாவையும் பந்தும் கொண்டு தோழியருடன் விளையாடியும், வண்டற்பாவை புனைந்தும், மலர் பறித்தும் பொழுது போக்குகின்றது.

குழந்தைகளுக்குத் தெய்வ உணர்ச்சி இளமையில் தானே படியும் வண்ணம் அவர்களைக் கோயில்களுக்குத் தம்முடன் அழைத்துச் சென்று வழிபாடு செய்வர்.

தலைவி ஒருத்தி கடவுள் உறையும் கோயில்கள் தோறும் தன் குழந்தையை வலஞ்செய்வித்து வணங்கி வரும்படி தோழியுடன் மகனை அனுப்பிய செய்தி,

எல்லா!

கடவுட் கடி நகர் தோறும் இவனை

வலம் கொளீஇ வா“ என, சென்றார் 25

என்னும் அடிகளாலும்

புத்தேளிர் கோட்டம் வலம் செய்து இவனொடு

புக்க வழி எல்லாம் கூறு. 26

என்னும் கலித்தொகைப் பாடலடிகளாலும் தலைவியின் கூற்று வழியாகத் தொரிய வருகிறது.

பிறந்த நாள்

குழந்தை பிறந்த நாளைப் பொரிதும் கொண்டாடுவர். இதனால், குழந்தை பிறந்த நாளினைக் குறிக்கும் இக்காலச் சாதகம் போன்றதொரு வழக்கம் முன்பு இருந்ததோ என்று ஐயுறவு தோன்றலாம். மன்னர் தமது பிறந்த நாளை வெகு விமாரிசையாகக் கொண்டாடுவதிலிருந்து, மக்களிடையே அவ்வழக்கம் பயின்றிருந்தது எனக் கொள்ளலாம். நன்னன் என்பான் தனது பிறந்த நாளில் கொண்டாடிய சோரி விழாவை உவமையாக எடுத்துக் காட்டுகிறது மதுரைக்காஞ்சி.

போரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாட்

சோரி விழவின் ஆர்ப்பெழுந் தாங்கு 27

தவிரவும், ஒவ்வொருவருக்கும் உயிர் நிலையாக ஒரு நாள்மீன் விண்ணில் நிலைபெற்றிருப்பதான நம்பிக்கையும் தொரியவருகிறது. ஒருவருடைய வாழ்க்கை முடிவுடன் அந்த மீனும் அழிந்து விடுமாம். இச்செய்தியை,

கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய!

நின்று நிலை இயர், நின் நாள்மீன் நில்லாது

படாஅச் செலீஇயர், நின்பகைவர் மீனே! 28

என்பதனால் அறிய இயலுகிறது. நாளும் கோளும் மக்களுடைய வாழ்க்கையில் இணைந்து செல்கின்றன. மணநாள் பார்த்தல், பிரயாணத்திற்கு நாள் பார்த்தல் முதலிய வழக்கமும் காண்கிறோம்.

பிரயாணத்திற்கு நாள் தடையாக இருத்தல்,

நாளும் கோளும் தகைத்தலும் தகைமே 29

என்பதனால் அறிய வருகிறது.

ஒருவன் பிறக்கின்ற வேளைக்குத் தக்கவாறு அவனது உருவு, குணம் முதலியன அமையும் என்பதும் ஒரு நம்பிக்கை. கலித்தொகையில் வரும் கூனி, குறளனை நோக்கி, 'குறளாய்ப் பிறத்தற்கு ஏதுவாகிய நாழிகையின் முகூர்த்தத்திலே ஆண்டலைப் புள்ளுக்குத் தன் பெடை ஈன்ற பறழாகிய மகனே" என்று விவாரிக்கின்றாள். குறளாய்ப் பிறந்தது அவன் பிறந்த வேளையின் பயன் என்பது அவள் கருத்து.

அன்னையோ! காண் தகை இல்லாக் குறள் நாழிப்

போழ்தினான்

ஆண்டலைக்கு ஈன்ற பறழ் மகனே! 30

என்று விளிக்கின்றாள் கூனி.

கற்றலின் மாண்பு

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே 31

என்றபடி தந்தை குழந்தையைச் சான்றோனாக ஆக்குதற்கு அவனுக்கு வேண்டும் கல்வி அளிக்கின்றான். ஆசிரியரையடுத்துக் கற்று அவருக்குக் காணிக்கை செலுத்தினர். கற்ற மாணவன் ஆசிரியர்க்கு உரிய காணிக்கை செலுத்தாவிடில், அவனுடைய செல்வம் குன்றும் என்றும் கூறுகிறார் ஒரு புலவர்.

கற்பித்தான் நெஞ்சு அழுங்கப் பகர்ந்து உண்ணான்

விச்சைக்கண்

தப்பித்தான், பொருளேபோல், தமியவே தேயுமால்" 32

என்பது அவர் வாக்கு.

மாணவர்கள் மை தடவிய ஓலையைக் கொண்டு கல்வி பயின்றனர். ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதிய எழுத்துத் தொரிவதற்காக மை பூசுதல் மரபு. ஆகவே கல்வி பயிலும் இளைஞரை,

மையாடல் ஆடல் மழபுலவர் 33

என்று குறிப்பிடுகின்றது பாரிபாடல். 'மையோலை பிடித்த இளைய புலவரது" எனப் பாரிமேலழகர் இதற்கு எழுதும் உரையும் நோக்கத் தகும். மேலும், ஓலையில் எழுதிச் செய்திகளை அனுப்புதலும் உண்டு. செய்தி வரைந்து ஓலையைக் கட்டி, அதன் தலையிலே அரக்கு இலச்சினை பொறிப்பர்.

போதர், அகடு ஆரப் புல்லி முங்குவேம்

துகள் தபு காட்சி அவையத்தார் ஓலை

முகடு காப்பு யாத்து விட்டாங்கு 34

என்பது கலித்தொகை. பறை அறைந்தும் செய்திகளை மக்களுக்கு அறிவித்து வந்தனர்.

நிறை அழி கொல்யானை நீர்க்கு விட்டாங்கு

பறை அறைந்தல்லது செல்லற்க என்னா

இறையே தவறு உடையான் 35

என்பதனால் இவ்வழக்கம் தொரியலாகும்.

ஓலை எழுத்துடன் கல்லெழுத்தும் முன்பு இருந்தது. இறந்த பெரு வீரர்க்கு நாட்டிய கல்லிலும் அவ்வீரப் பெருமக்களின் பெயரும் பீடும் பொறித்தலைக் காண முடிகிறது. ஆகவே, எண்ணும் எழுத்தும் கண்ணென வரைந்து கற்றல் பண்டு தொட்டே பயின்று வருவது. ஆனால், அந்தணர் வேதங்களை எழுதாது வழிவழிக் கேள்வி வாயிலாகவே கற்றுப் போற்றினர் என்பது தொரிய வருகிறது. பிரமச்சாரி வாழ்க்கை நிலையுடைய ஒரு பார்ப்பன மகனை வருணிக்குமிடத்துக் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் அவன் வேதம் கற்ற விதமும் அவனது தோற்றம் முதலியனவும் வருணிக்கப்பட்டுள்ளன.

பார்ப்பன மகனே! பார்ப்பன மகனே!

செம்பூ முறுக்கின் நல்நார் களைந்து

தண்டொடு பிடித்த தாழ்க மண்டலத்துப்

படிவ உண்டின் பார்ப்பன மகனே!

எழுதாக் கற்பின் நின் சொலுள்ளும் 36

என்று மாணிப்படிவப் பார்ப்பனன் தோற்றமும் ஒழுக்கமும் சுட்டிக் காட்டப்பட்டிருத்தல் காணலாம். மாணிப்படிவம் என்பது பிரம்மச்சாரியத்தைக் குறிக்கும்.

தொரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன் என்பதனால் மூன்று தமிழும் சிறப்புறக் கற்றனர் மக்கள் என்பது அறிய வரும். மொழி இலக்கண மரபுகளையும் பொருள் இலக்கண மரபுகளையும் உணர்ந்தனர்.

தள்ளாப் பொருளியல்பின் தண் டமிழாய் வந்திலார்

கொள்ளாரிக் குன்று பயன் 37

எனப் பொருள் இலக்கணம் சிறப்பிக்கப்படுதலின் ஏனை எழுத்தும் சொல்லும் தொரிதல் வெளிப்படை. யானையைப் பழக்கும் பாகர் யானைப் பேச்சான வடமொழியில் அதனைப் பழக்குகின்றனர்.

கவைமுட் கருவியின், வடமொழி பயிற்றிக்,

கல்லா இளைஞர் கவளங் கைப்ப 38

என்பது முல்லைப்பாட்டு தரும் செய்தி. இதற்கு, வடமொழியை அடியிலே கல்லாத இளைஞர் யானைப் பேச்சான வடமொழியைக் கற்றுப் பலகாற் சொல்லிக் கவைத்த முள்ளையுடைய பாரிக்கோலாலே கவளத்தைத் தின்னும்படி குத்த என்று நச்சினார்க்கினியர் உரை வகுக்கின்றார். யானையைப் பழக்குவோர் இளமையிலேயே வடமொழியைக் கல்லாது தம் தொழிலிற்கு வேண்டும் அளவு அம்மொழி தொரிந்திருந்தனர் என்னும் குறிப்பு இதனால் போதரும். ஆதலால், வடமொழிக் கல்வியும் போற்றப்பட்டது போலும்.

நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்து

உரவுச்சினந் தணித்து, பெருவெளிற் பிணிமார்

விரவுமொழி பயிற்றும் பாக ரோதை 39

என மலைபடுகடாமும் யானை பயிற்றுவோர் அதற்குப் பயிற்றுவிக்கும் மொழியினைக் குறிப்பிடுகின்றது.

கற்கும் இளைஞர் பிரமச்சாரிய விரதம் காத்துக் கல்வியையும் பெற்றனர். தலைவன் விடுத்த தூதுவனாக வந்த ஓர் இளைஞனை,

அன்னாய்! இவன் ஓர் இள மாணாக்கன்

தன்ஊர் மன்றத்து என்னன் கொல்லோ?

இரந்தூண் நிரம்பா மேனியொடு

விருந்தின் ஊரும் பெருஞ் செம்மலனே 40

என்று புகழ்கிறாள். தூதாக வந்த இளைஞன் இரந்து உண்ணும் பிரமச்சாரிய வாழ்க்கையுடையவன் என்பதும், அவனது பேச்சால் அவன் கல்வி சான்றவனாய்த் தொிதலும் பெறப்படுகின்றன. அந்தணர்கள் நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமச்சாரியம் காத்தலும், ஒன்பது புரிகளைக் கொண்டு ஆக்கிய முந்நூலை அணிதலும் மரபு. ஏறு தழுவும் விழாவிலே பிறரைக் குத்திக் குடர்மாலையைக் கொம்பில் தாங்கி வரும் ஏற்றின் முன் நின்று ஆடிய ஒருவன் அக்குடரை இரண்டு கையாலும் எடுத்து வயிற்றிலே இடுகின்றான். இது சிவந்த நூற்கழியை ஒருவன் இரண்டு கையிலும் கோத்துப் பிடித்திருக்க அதனை மூன்று நூலாகக் கொள்கின்றவனை ஒத்திருக்கிறது. அந்தணர் முத்தீயையும் பேணி வழிபடுகின்றனர். எனவே, இவர், ஒன்பது கொண்ட மூன்று புரி நுண்ஞாண் உடையவர் என்றும்,

மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து,

இரு பிறப் பாளர் 41

என்றும் சிறப்பிக்கப்படுகின்றனர்.

இங்ஙனம் இளமை வாழ்வு கழிய ஆடவர் வீரக்கழல் அணிந்து போர்ப்பயிற்சி முதலியன பெறுதலும், கன்னியர் அம்பாவாடல் முதலியன நிகழ்த்துதலும் ஆகிய குமரப்பருவத்தை எய்துகின்றனர். குன்றக்குறவாரின் மகளிர் இப்பருவத்தில் தினைப்புனக் காவலுக்கு அனுப்பப்படுகின்றனர். குமரப்பருவத்தில்,

வில்லோன் காலன கழலே் தொடியோள்

மெல்அடி மேலவும் சிலம்பே 42

என்றவாறு கழல் ஆர்க்கவும் சிலம்பு ஒலிக்கவும் துள்ளு நடை போடுகின்றனர் குமரரும் குமாரியரும்.

வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே்

தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே்

ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்,

களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே 43

என்று மறக்குடிப் பிறந்த தாய் ஒருத்தி தன் மகனது கடமையைக் கூறுகிறாள். மறக்குடிப் பிறந்தவர் ஈடுபடும் போரில் கொல்லர் உலைத்தொழில் புரிகிறார் வணிகர் கடலிலும் தரையிலும் சென்று வணிகம் புரிகின்றனர். ஆகவே, எல்லா மாந்தரும் அவரவர் இயல்புக்கும் திறமைக்கும் ஏற்ற தொழில்களிலே புகுகின்றனர்.

தைந்நீராடும் நோன்பு

கன்னி மகளிர் இளமையில் நோற்கும் நோன்புகளிலே ஒன்று அம்பாவாடல். இதனைத் 'தைந்நீராடல்" என்றும் குறிப்பிடுவர். சிலர் சிறுமியாதலின் தாயார் அருகே நிற்க நீராடுகின்றனர். மார்கழி மாதத்து நிறைமதி நாளாகிய திருவாதிரையில் பூசகர் தெய்வத்திற்கு விழா எடுக்க, கன்னிப் பெண்கள் கூடி, 'பூமியானது மழைவளம் பெற்றுக் குளிர்வதாக" என்று அம்பா ஆடலை மேற்கொள்கின்றனர். அவர்களுக்குச் சடங்கு அறிந்த முதுபார்ப்பனிமார் நோன்பு நோற்கும் முறைமையைத் தொரிவிக்கின்றனர். அவர்கள் காட்டிய முறைப்படி அதிகாலையில் நீராடி, கன்னி மகளிர் நோன்பு நோற்கின்றனர்.

வை எயிற்றவர் நாப்பண், வகை அணிப் பொலிந்து நீ

தையில் நீராடிய தவம் தலைப்படுவாயோ? 44

என்னும் அடிகளாலும்

இழைஅணி ஆயமொடு தகுநாண் தடைஇத்

தைஇத் திங்கள் தண்கயம் படியும்

பெருந்தோட் குறுமகள் 45

என்னும் அடிகளாலும்

நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்

தைஇத் தண்கயம் போல

பலர்படிந் துண்ணும் 46

என வரும் பாடற்பகுதிகளாலும் கன்னிமகளிர் தம் ஆயத்தாருடன் நீராடி மகிழ்தல் புலப்படும்.

புகை, பூ. அவி, ஆராதனை, அழல் பல ஏந்தி

நகை யமர் காதலரை நாளணிக் கூட்டும்

வகை சாலும் வையை வரவு  47

என வையையின் வரவு கூறுதலின் மகளிர் நதியில் நீராடி அதற்கு ஆராதனை செய்தற்கு வேண்டும் புகை முதலியன கொண்டு செல்லுதல் புலப்படும். அங்கே வையைக்கு மடை கொடுத்தலையும் காண்கிறோம்.

வையை! நினக்கு மடைவாய்த் தன்று  48

என்பது மகளிர் தைந்நீராடல் நோன்பில் நதிக்குப் படைக்கும் படையலைக் குறிக்கும்.

தைஇய மகளிர்தம் ஆயமொடு அமர்ந்து ஆடும்

வையை வார் உயர் எக்கர் நுகர்ச்சியும் உள்ளார்கொல் 49

என்பதனால் மகளிர் தம் ஆயத்தாருடன் தைந்நீராடுதல் அறிய வரும் இந்தப் பாவை நோன்பில், வண்டல் விளையாட்டுக்கு உரிய பாவையை, நீர்த்துறையிடத்து வைத்து, கொம்பு என்னும் இசை ஒலிக்கக் குரவைக் கூத்தாடுதலும் உண்டு.

தைஇ நின்ற தண்பெயல் கடைநாள்,

பொலங்காசு நிறைந்த கோடுஏந்து அல்குல்

நலம்கேழ் மாக்குரல் குழையொடு துயல்வரப்,

பாடுஊர்பு எழுதரும் பகுவாய் மண்டிலத்து

வயிர்இடைப் பட்ட தெள்விளி இயம்ப

வண்டற் பாவை உண்துறைத் தா£இத்,

திருநுதல் மகளிர் குரவை அயரும்

பெருநீர்க் கானல் தழீஇய இருக்கை,

வாணன் சிறுகுடி 50

என்னும் அகப்பாட்டால் மேற்குறித்தது புலனாகும். பாவையை நீர்த்துறையில் அமைத்துச் செய்யும் நோன்பு ஆதலால் இது பாவை நோன்பு எனப்பட்டது போலும். இப்பாவைக்கு அரும்பு முதலிய நீர்ப்பூக்களைப் பறித்து அணிதலும் உண்டு.

படிவ மகளிர் கொடி கொய்து அழித்த

பொம்மல் அடும்பின் வெண்மணல் ஒருசிறை  51

என்பது அடும்பு மலரை நோன்பு இயற்றும் மகளிர் கொய்தல் பற்றிக் கூறும். இம்மகளிர் நீராடியதனால் ஈரம் பூண்ட மேனியராய் உள்ளனர். தினைக்கதிரைப் பறித்துக் கொண்ட பெண் குரங்கு, ஆண் குரங்குடன் கூடி அத்தினையைக் கையால் நெருடி உண்ணும் தோற்றம் நோன்பியர் நோன்பில் உணவு உண்ணும் காட்சியை நினைவூட்டுகின்றது.

கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்தினை
முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல்வரை ஏறி
அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டு, தன்
திரை அணற் கொடுங்கவுள் நிறைய முக்கி,
வான் பெயல் நனைந்த புறத்த, நோன்பியர்
தைஊண் இருக்கையின் தோன்றும் நாடன் 52

என்னும் நற்றிணைப் பாடல் இதனை உணர்த்தியுள்ளது.

அம்பாவாடல்

அம்பாவாடலாம் தைந்நீராடலினால், 'உலகம் மழையால் குளிர்வதாக" என வேண்டுதல் ஒரு பயன். மேலும் அக்கன்னியர் தமக்கு ஏற்ற கணவனைப் பெற்று, அவனுடன் கூடி என்றும் இன்பம் பெற்றுச் சுற்றமுடன் சிறந்து வாழ வேண்டும் என்று வேண்டுதலும் மற்றொரு பயனாகும். பாவை நோன்பு இயற்றுவார் பின்வரும் பயன்கள் தமக்கு வாய்க்க வேண்டும் என்று வேண்டுவதாய்ப் பதினோராம் பாரிபாடல் குறிப்பிடுகிறது.

'தைந்நீரே! யாம் ஆடும் அளவொடு தெளிந்து வருகின்றாய். நீ தக்காய்!" என்கின்றனராம் சிலர். இன்னும் சிலர் 'எம் காதலரைத் தழுவும் வீறு பெறுக என வேண்டுகின்றோம்" என்கின்றனர். மற்றும் சிலர், 'பூவில் விழும் வண்டு பின்னர் அப்பூவை நீங்கித் தனியே விட்டுப் போவது போலப் போகாமல், எம்மால் விரும்பப்படும் கணவர் எம்மைப் பாதுகாப்பாராக" என்கின்றனர். 'என் கணவரும் யாமும் கிழவர் கிழவியர் எனப்படாமல் இத்தவம் நிலைபெற்ற இளமையைத் தர மகப்பெற்றுச் செல்வத்தொடும் சுற்றத்தொடும் நிலை பெறுக" என வேண்டுகின்றனர் வேறு சிலர்.

நீ தக்காய், தைந்நீர் நிறம் தெளிந்தாய் என்மாரும்

கழுத்து அமை கை வாங்கக் காதலர்ப் புல்ல,

விழுத்தகை பெறுக!.. என வேண்டுதும், என்மாரும்

பூவீழ் அரியின் புலம்பப் போகாது,

யாம் வீழ்வார், ஏமம் எய்துக என்மாரும்,

கிழவர் கிழவியர்.. என்னாது, ஏழ் காறும்,

மழ ஈன்று மல்லற் கேள் மன்னுக! என்மாரும் 53

இத்தகைய தைந்நீராடலையும் பாவை நோன்பையும் பிங்கல நிகண்டு பிள்ளைப் பாட்டின் ஒரு பகுதியாகக் கொண்டு கூறுதலும் ஈண்டு ஒப்பு நோக்கத் தகும்.

பேணும் சிறப்பின் பெண் மகவு ஆயின்

மூன்றாம் ஆண்டில் குழமணம் மொழிதலும்

ஐந்தின் முதலா ஒன்பதின் காறும்

ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றலும்

பனிநீர் தோய்தலும் பாவை ஆடலும் 54

என்பது பிங்கலச் சூத்திரம்.

திருமணமும் யானை வழிபாடும்

திருப்பரங்குன்றத்தில் முருகப்பெருமானின் ஊர்தியாகிய யானையைக் கன்னிமை கனிந்த மகளிரும் திருமணம் பெற்ற மகளிரும் பூசித்தல் கூறப்பட்டுள்ளது. இந்த யானைப் பூசையில் அதன் மத்தகத்தில் குங்குமத்தால் அலங்காரிப்பர். பூவொடு கூடிய இனிய நீரை அதன்மேல் சொரிவர். செவிகளிலே வெண்சாமரத்தை வைத்து, அதன்மேல் பவளத்தால் செய்த நல்ல காம்பினையுடைய பொற்குடையையும் எடுப்பர் அவ்யானை உண்ணுதற்குச் சோற்றுக் கவளமும் படைக்கின்றனர். பூசையின் பின் யானை உண்ட மிச்சிலை மகளிர் உண்பர். இவ்வாறு பூசை செய்யாவிடில், மகளிர்தம் காதலர் முறுவலொடு கூடிய தலையளியை எய்தார் என்றும், கன்னிமை கனிந்த காலத்தார் குறைவற்ற மைந்தர் தோளைக் கூடார் என்றும் கருதினர். இந்த யானைப் பூசையை,

நின யானை சென்னி நிறம் குங்குமத்தால்

புனையா, பூநீர் ஊட்டி, புனை கவாரி சார்த்தா,

பொற்பவழப் பூங்காம்பின் பொற்குடை ஏற்றி,

மலிவுடை உள்ளத்தான் வந்துசெய் வேள்வியுள்,

பல்மணம் மன்னுபின் இருங் கூந்தலர்,

கன்னிமை கனிந்த காலத்தார், நின்

கொடி ஏற்று வாரணம் கொள் கவழ மிச்சில் -

மறு அற்ற மைந்தர் தோள் எய்தார் மணந்தார்

முறுவல் தலையளி எய்தார் - நின் குன்றம்

குறுகிச் சிறப்பு உணாக்கால் 55

என்னும் பாடற்பகுதி உணர்த்துகிறது.

நாட்டுவாழ் கன்னியர் தைந்நீராடி நோன்பு நோற்கின்ற காலத்து, குன்றக் குறவருடைய, சிறுமகளிர் தினைப்புனங் காவலுக்குச் செல்லுகின்றனர். ஆயர் மகளிர் வெண்ணெய், மோர் முதலிய பாற் பயன்களை விலை பகரச் செல்லுகின்றனர். இவ்வாறாகக் கன்னி மகளிர் பெற்றோர்க்கு உதவி வாழ்கின்றனர். இங்ஙனமே காளையரும் வினைமேல் செல்கின்றனர். இவ்வாறு சுதந்திரத்தோடு உலவும் காளையரும் மங்கையரும் விதிவழி ஒருவரை ஒருவர் எதிர்த்துப் பண்டைத் தொடர்பால் உள்ளம் ஒன்றுபடுகின்றனர். மகளிர் நோன்பு இயற்றும் துறைகளில் கூட ஆடவர் மகளிர் சந்திப்பு நேர இடமாகிறது. வையை நதித் துறையில் தைந்நீராடி மகிழும் மகளிரைக் கண்டு உவப்படைந்த தலைமகன் ஒருவன்,

கண்டார்க்குத் தாக்கு அணங்கு இக் காரிகை காண்மின்

பண்டாரம், காமன்படை, உவள்கண் காண்மின் 56

எனப் பேசுவது அவன் கொண்ட பெருங்காதலைப் புலப்படுத்தும். கோவிலும் கூட காதல் நிகழ்ச்சிகளுக்கு நிலைக்களமாதலைக் கலித்தொகை சித்திரிக்கும் கூனி குறளன் காதல் உரையாடலில் காணலாகும். இறுதியாகக் குறளனை விரும்பிய கூனி,

ஆங்கு ஆக் சாயல் இன் மார்ப! அடங்கினேன் ஏஎ

பேயும் பேயும் துள்ளல் உறும் எனக்

கோயிலுள் கண்டார் நகாமை வேண்டுவல்

தண்டாத் தகடு உருவ! வேறாகக் காவின் கீழ்ப்

போதர் அகடு ஆரப் புல்லி முயங்குவோம் -

துகள்தபு காட்சி அவையத்தார் ஓலை

முகடு காப்பு யாத்து விட்டாங்கு 57

இங்கே, ‘கோயிலுள் கண்டார் நகாமை வேண்டுவல்“ என்றும், ‘வேறாகக் காவின் கீழ்ப் போதர்“ எனச் சந்திப்பிற்கு ஏற்ற இடம் கூறுதலும் காணலாம். ஆகவே, கன்னியரும், காளையரும் ஒருவரை ஒருவர் சந்திக்க நேரும் இடங்களில் ஒருவர்க்கொருவர் காதல் உணர்வு எழ இடமுண்டாதல் பெறப்படும். காதல் நிகழ்ச்சிக்குக் குறிஞ்சி நிலத்தைப் பின்னணியாகக் கொண்டு புலவர் கூறுதல் இலக்கிய மரபே அன்றி வேறன்று.

காதலரைக் கண்டு களவு மணம் கொள்ளும் நிகழ்ச்சியையும், பின்பு உலகம் அறிய மணம் கொண்டு வாழும் கற்பியல் நிகழ்ச்சியையும் சுவைபட நாடக வழக்கும் உலகியல் வழக்குமாகக் கவிஞர்கள் பாடுகின்றனர். அடியோர்களிடத்திலும், வினைவல தொழிலாளர் முதலியோரிடத்தும் நிகழும் காதற் பேச்சுகளையும் கலித்தொகை சித்திரிக்கின்றது. மகளிரை வலிந்து கொண்டு சென்று மணந்து கொள்ளும் இராக்கத மணவொழுக்கமும் இல்லாமல் இல்லை.

மைஇல் மதியின் விளங்கும் முகத்தாரை

வௌவிக் கொளலும் அறன் எனக் கண்டன்று 58

என்று பேசுகிறான் கலித்தொகைப் பாடல் ஒன்றில் வரும் தலைவன். ஆகவே ஒத்த அன்புடை ஆடவர் மகளிர் தனிமையிடத்துத் தோன்றி காதல் கொண்டு, பின் சுற்றத்தார் இசைவுடன் மணந்து வாழும் நிகழ்ச்சிகள் இலக்கியங்களில் காணுமாறே நிகழ்ந்தனவெனல் பொருத்தமாகாது. பல்வேறு உலகியல் நிகழ்ச்சியையும் நாடகச் சுவைபட அகப்பொருட் பாடல்கள் வருணிக்கும் ஒழுக்கப் பண்புகள் உண்மையொடு பொதிந்த கற்பனைப் புனைவுகளே.

களவு ஒழுக்கம் சிறப்பாகவே கொள்ளப்படுகிறது. காதல் திருமணம் புலவர்களால் பொரிதும் புகழ்ந்து போற்றப்பட்டது என்பதனை,

புலவர் புகழ்ந்த நார்இல் பெருமரம்

நிலவரை எல்லாம் நிழற்றி,

அலர் அரும்பு ஊழ்ப்பவும் வாராதோரே 59

என்பதனால் உணர இயலுகிறது. மேலும் இங்ஙனம் ஒருவரை ஒருவர் மனம் ஒப்பிச் சேர்தல் வழிவழிவரும் அன்பின் தொடர்பு என்றே கொண்டனர்.

ஒன்றுதும் என்ற தொன்றுபடு நட்பின்

காதலர் 60

என்றும், 'தொல்கேள்" என்றும் போற்றினர். இயற்கையில் அமைந்த புள்ளும் மாவும் இணை இணையாகச் சேர்ந்து இவர்க்கு இன்பக் கிளர்ச்சியை மேலெழச் செய்கின்றன. காட்டில் மானின் சேர்க்கையைக் காதலிக்குக் காட்டி,

உயிர் கலந்து ஒன்றிய செயிர்தீர் கேண்மைப்

பிரிந்துறல் அறியா விருந்து கவவி,

நம்போல் நயவரப் புணர்ந்தன-

கண்டிகும் மடவரல்! -புறவின் மாவே 61

என்று பேசுகிறான் ஒரு தலைவன். ஒத்த அன்புடை இருவர் நெஞ்சங்கள் ஒன்றுபட, அவர் தம் பழவினைப் பாசம் தொடர ஈருடல் ஓருயிராய்க் கலந்து ஒழுகுகின்றனர்.

மாதரும் மடனும் ஓராங்குத் தணப்ப

நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி

இருவேம் ஆய்ந்த மன்றல் இது என,

நாம் அறிவுறாலின் பழியும் உண்டோ? 62

தலைவனும் தலைவியும் பெருமையும் உரனும் அச்சமும் நாணமும் நுணுகிய நிலையால் பிறந்த களவு மணத்தை அறிவித்தல் புகழே அன்றிப் பழியின்று என்கிறாள் ஒரு தலைவி. இதனை, 'இருவேம் ஆய்ந்த மன்றல்" என்கிறாள் மற்றொருத்தி. இதனால் கொடுப்போரும் அடுப்போரும் இன்றி அன்புடை இருவர் நெஞ்சம் கலந்த காதல் வாழ்வு உயர்வாகவே மதிக்கப்படுகிறது.

யாயும் ஞாயும் யார் ஆகியரோ?

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?

யானும் நீயும் எவ்வழி அறிதும்?

செம்புலப் பெயல் நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே? 63

அன்புடை நெஞ்சம் தாம் கலந்த காதலாரின் களவு வாழ்வில் தடையின்றிக் கணவனை எய்தப் பெறாமையால், இப்புது ஒழுக்கத்தாலும் தலைவியின் மேனி வேறுபடுகிறது. அது கண்ட தாய் இவ்வேறுபாடு இவளுக்கு எதனால் ஆயது என்று அறியக் கட்டுவிச்சியையும் கழங்குக்குறி கூறும் வேலனையும் அழைத்து வினாவ முற்படுகின்றாள். 'அகலுள் ஆங்கண் அறியுநர் வினாய்" என்பதற்கு, அகன்ற இடத்தையுடைய ஊரிடத்துக் கட்டினானும் கழங்கினானும் எண்ணியறிவாரை வினாவி, அவன் தெய்வத்தான் வந்த வருத்தம் என்றலின், என்று நச்சினார்க்கினியர் விளக்கம் தருவர்.

குறி கூறுதல்

கட்டுவிச்சியை அகவன் மகள் என்று அழைப்பர். இவள் தெய்வங்களை அழைத்துக் குறி கூறும் இயல்பினள். குறி கூறும் பெண்டிர் முதுமை வாய்ந்தவராயும் இருப்பர் போலும். இவளைச் சங்குமணி போன்ற வெண்ணிறமுடைய கூந்தலையுடையவளே என்று விளித்துக் கூறுகிறாள் ஒரு தலைவி. வெள்ளிய நுனியையுடைய சிறு கோல் ஒன்றை, அதாவது வெள்ளிப்பூண் கட்டிய சிறிய கணுக்களோடு கூடிய மூங்கிற்கோலைக் கையிலே பிடித்திருப்பர்.

அகவன் மகளே! அகவன் மகளே!

மனவுக் கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்

அகவன் மகளே! பாடுக பாட்டே

வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர் 64

என்னும் அடிகளாலும்

இறுங்கழை இறும்பின் ஆய்ந்து கொண்டு அறுத்த

நுணங்கு கண் சிறு கோல் வணங்கு இறை மகளிரொடு 65

என்னும் அடிகளாலும்

நுண்கோல் அகவுநர் 66

என்னும் அடியாலும் அகவன் மகளிரின் தோற்றத்தை நாம் அறிய முடிகிறது. இவள் முறத்தில் நெல்லையிட்டு அதனை எண்ணி, அதனால் போந்த சில

நிமித்தங்களை அறிந்து கூறுவள். இவள் தெய்வம் ஏறிக் குறி கூறுதலும் உண்டு. தெய்வத்திற்காக அப்பொழுது பிரப்பாரிசையை வைப்பள். இம்மரபுகளை,

குன்ற நாடன் பிரிவின் சென்று

நல்நுதல் பரந்த பசலை கண்டு, அன்னை

செம்முது பெண்டிரொடு நெல் முன் நிறீஇ,

கட்டின் கேட்கும் ஆயின் 67

சூர் உறை வெற்பன் மார்பு உறத் தணிதல்

அறிந்தனள் அல்லள் அன்னை் வார்கோல்

செறிந்து இலங்கு எல்வளை நெகிழ்ந்தமை நோக்கிக்

கையறு நெஞ்சினள் வினவலில், முதுவாய்ப்

பொய்வல் பெண்டிர் பிரப்பு உளர்பு இ£இ,

முருகள் ஆர்அணங்கு என்றலின் 68

எனவரும் பாடற்பகுதிகளிலே காண்கிறோம். இங்ஙனம் கட்டுவிச்சி இத்தலைவியின் மேனி வேறுபாடு முருகனால் வந்தது என்று குறி கூறுதலின், அத்தாய் முருகனுக்குப் பூசை போடுவதற்குரிய வேலனை அழைக்கின்றாள். இவனும் அகவன் மகளைப் போலவே கோல் ஒன்றைத் தாங்கியிருப்பான். அந்தக் கோலில் சிறிய பைகள் தொங்கவிடப்பட்டிருக்கும். இவன் தன் தலைமயிரைக் கட்டாகச் சுற்றித் தொங்கவிடப்பட்ட ஆடையைத் தலையிலே கட்டியிருப்பான். மேல் நிகழ்வது அறிந்து கூறும் திறமையும் உடையான்.

அறுவை தோயும் ஒருபெருங் குடுமி,

சிறுபை நாற்றிய பல்தலைக் கொடுங்கோல்,

ஆகுவது அறியும் முதுவாய், வேல! 69

என இவன் அழைக்கப்படுகிறான்.

இவ்வேலன் கூறும் குறி கழங்குக் குறியாகும். கழற்சி வித்துப் பலவற்றை முருகன் முன் போட்டு, தன் கையில் பிடித்திருக்கும் சிறுபைகள் கட்டிய கோலால் வாரி எடுக்கின்ற காலத்து, குறிப்புக் கண்டு கூறும் ஒருவகைக் குறி.

அணங்கு அறி கழங்கின் கோட்டம் காட்டி

வெறி என உணர்ந்த உள்ளமொடு, மறி அறித்து

அனனை அயரும் முருகு நின்

பொன்நேர் பசலைக்கு உதவாமாறே? 70

என்பதனால் தெய்வத்தை முன்னிட்டு அறியப்படுவது இக்கழங்குக்குறி என்பதும், கழங்கின் மாறுபாட்டாலே வெறியாட்டு எடுக்க அன்னை துணிதலும் இங்கு கூறப்பட்டுள்ளன. கழங்குக் குறி பார்க்குமிடத்துக் தலைவியின் நோய் தணித்தற்கு ஒரு படிமம் பண்ணிக் கொடுத்தலும் உண்டு. இந்தப் படிமம் கன்னம் என்று கூறப்படும்.

பொய்யா மரபின் ஊர்முது வேலன்

கழங்கு மெய்ப்படுத்து, கன்னம் தூக்கி,

முருகு என மொழியும் 71

என்னும் அடிகளாலும்

பொன் நகர் வரைப்பில் கன்னம் தூக்கி

முருகு என மொழியும் 72

என்னும் அடிகளாலும் கழங்குக் குறி பார்க்கும் வேலன் ‘கன்னம்“ என்பதும் உடன் வைத்துக் குறிகூறுதல் அறிய வரும். மணல் பெய்த முற்றத்திலே தெய்வம் தொழுது வேலனை அழைத்துக் குறி கேட்கின்றனர். இங்ஙனம் மகளிர் கழங்குக்குறி கேட்டலைப் பின்வரும் பாடற்பகுதிகளிலும் காணலாகும்.

பெய்ம்மணல் முற்றம் கடி கொண்டு

மெய்ம்மலி கழங்கின் வேலற் தந்தே 73

என்னும் அடிகளாலும்

நல் நுதல் சாய, படர்மலி அரு நோய்

காதலின் தந்தமை அறியாது, உணர்த்த,

அணங்குறு கழங்கின் முதுவாய் வேலன்

கிளவியின் தணியின் நன்றுமன் 74

என்னும் அடிகளாலும்

பெய்ம்மணல் முற்றம் கவின் பெற இயற்றி,

மலை வான் கொண்ட சினை இய வேலன்

கழங்கினால் அறிகுவது என்றால்,

நன்றால் அம்ம, நின்ற இவள் நலனே? 75

என்னும் அடிகளாலும்

பெய்ம்மணல் வரைப்பில் கழங்கு படுத்து, அன்னைக்கு

முருகு என மொழியும் வேலன் 76

என்னும் அடிகளாலும்

பொய் படுபு அறியாக் கழங்கே!- மெய்யே

மணி வரைக் கட்சி மடமயில் ஆலும் நம்

மலர்ந்த வள்ளி அம் கானங்கிழவோன்

ஆண்தகை விறல் வேள் அல்லன்-இவள்

பூண் தாங்கு இளமுலை அணங்கியோன் 77

என்னும் அடிகளாலும் கழங்குக்குறி கேட்டல் புலப்படுகிறது.

தலைவியின் மேனி வேறுபாடு கண்ட போது பார்க்கும் குறிகளே கட்டும் கழங்கும் என்று கூறுவதற்கில்லை. இனிமேல் என்ன நிகழும் என்பதை முன்னதாக அறிந்து கொள்வதற்காக மக்கள் விரும்பும் காலங்களில் பார்க்கப்படும் குறிகளே இவை. மகட்போக்கிய தாய் ஒருத்தி, மகளைக் கொண்டு சென்ற தலைமகன் அவளை முதலில் அவன் என் மனைக்கே அழைத்து வருவானா? அல்லது தன் இல்லத்திற்கே கொண்டு செல்வானா? என்று கேட்கிறான்.

ஆகுவது அறியும் முதுவாய், வேல!

கூறுக மாதோ, நின் கழங்கின் திட்பம்

மாறா வருபனி கலுழும் கங்குலில்

ஆனாது துயரும் என்கண் இனிது படீஇயர்

எம் மனை முந்துறத் தருமோ?

தன் மனை உய்க்குமோயாது அவன் குறிப்பே! 78

இதனால், இக் குறிகள் மக்கள் விரும்பும் சில பல நிகழ்ச்சிகளின் உண்மை அறிதற்குப் பார்க்கப்படுபவை என்பது பெறப்படும்.

மடல் ஏறுதல்

மடல் என்பது பனை மடலால் குதிரை வடிவினதாகச் செய்யப்பட்ட உருவமாகும். காமம் மிக்க தலைவன் பனைமடலால் குதிரையைப் போல் ஓர் உருவம் செய்து, அதன் கழுத்தில் மணி, ஆவிரை மாலை முதலியவற்றைப் பூட்டி அதன் மேலாக ஏறி, ஊர் மன்றத்தே வருவான். இவன் தன் கையில் தான் காதலித்த பெண்ணின் உருவையும் தன் வடிவையும் படத்தில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். மடலேறும் தலைமகன் எருக்கமாலை, ஆவிரம் மாலை, வெள்ளெலும்பு மாலை முதலியன அணிந்து கொண்டிருப்பான். இவனது வருகை கண்ட ஊரினர் இவனுக்கு இன்னாளொடு நட்பு உண்டு என்று அறியவே செய்தி எங்கும் பரவிப் பழிப்புக்கு இடமாகும். அது கேட்ட தலைவியின் சுற்றத்தார் அத்தலைமகனுக்கு அவளை மணம் முடித்து வைப்பர்.

மா என மடலும் ஊர்ப் பூ எனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப,
மறுகின் ஆர்க்கவும் படுப்
பிறிதும் ஆகுப காமம் காழ்க் கொளினே! 79

என்னும் அடிகளாலும்

அறிகதில் அம்ம இவ் ஊரே! மறுகில்
நல்லோள் கனவன் இவன் எனப்
பல்லோர் கூற, யாஅம் நாணுகம் சிறிதே 80

என்னும் அடிகளாலும்

ஒறுப்பின், யான் ஒறுப்பது நுமரை யான் மற்று இந்நோய்
பொறுக்கலாம் வரைத்து அன்றிப் பொரிதாயின், பொலங்குழாய்,
மறுத்து இவ் ஊர் மன்றத்து மடல் ஏறி,
நிறுக்குவென் போல்வல் யான் நீ படு பழியே? 81

என்னும் அடிகளாலும்

மணிப்பீலி சூட்டிய நுலொடு, மற்றை

அணிப்பூளை, ஆவிரை, எருக்கொடு, பிணித்து யாத்து,

மல்லல் ஊர் மறுகின் கண், இ.்.து ஒத்தன்

எல்லீரும் கேட்டீமின் என்று 82

என்னும் அடிகளாலும்

வருந்த மா ஊர்ந்து, மறுகின்கண் பாட,

திருந்திழைக்கு ஒத்த கிளவி கேட்டு, ஆங்கே

பொருந்தாதார் போர்வல் வழுதிக்கு அருந்திறை

போல, கொடுத்தார், தமர் 83

என்னும் அடிகளாலும் மடலேற்றின் மூலம் ஒரு தலைவன் தான் விரும்பிய காதலியைப் பெற்று மகிழ்ந்தமை உரைக்கும். மடலேற்றம் பற்றிய பாடல்களும் சங்கப் பாடல்களில் பலவாகும். மடலேறுதல் ஒரு நிகழ்வாக நிகழ்ந்தாலும் இதுவும் ஒரு சடங்கு போன்றே நிகழ்த்தப்பட்டிருக்கிறது எனலாம்.

காமம் முற்றியார் மடலேறுதலேயன்றி, 'பிறிதும் ஆகுப" என்றும் குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது. இங்கே பிறிதுமாதலாவது காதல் கைகூடாத நிலையில் தம் உயிரையே மாய்த்துக் கொள்ளுதலாம். இத் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவார் மலை மீதேறி அங்கிருந்து பாய்ந்து உயிர் நீப்பர் இதனை 'வரை பாய்தல்" என்பர்.

ஆராக் காமம் அடுஉ நின்று அலைப்ப,

இறு வரை வீழ்நாரின் நடுங்கி 84

என்பதனால் காமத்தால் நலிவுற்றார் வரைபாய்தல் உணரலாம்.

காதல் மணம் பலர் அறி கற்பு மணமாக மலர்கிறது. பெண்ணின் தமர் உரிய தலைமகனை அறிந்து அவனுக்குத் தன் மகளை உவப்புடன் அளிக்க முன் வருகின்றனர்.

கூன் முள் முண்டகக் கூர்ம் பனி மாமலர்

நூல்அறு முத்தின் காலொடு பாறித்

துறை தொறும் பரக்கும் தூமணற் சேர்ப்பனை

யானும் காதலென் யாயும் நனி வெய்யள்

எந்தையும் கொடீஇயர் வேண்டும்

அம்பல் ஊரும் அவனொடு மொழிமே 85

இதனால் தலைவி ஒருத்தி விரும்பிய தலைவனுக்குத் தந்தையும் தாயும் தம் மகளைத் திருமணம் செய்து கொடுக்க முன் வருகின்றனர்.

வேங்கைக் கண்ணியன் இழிதரு நாடற்கு

இன் தீம் பலவின் ஏர்கெழு செல்வத்து

எந்தையும் எதிர்ந்தனன், கொடையே 86

பெண் கேட்டு வந்தார் தம் தகுதிக்கு ஏற்றவர் அல்லராயின் மணம் செய்து கொடுக்க ஒப்புவதில்லை.

புரையர் அல்லோர் வரையலள், இவள் எனத்

தந்தையும் கொடாஅன் 87

என்னும் அடிகளாலும்

நிரல் அல்லோர்க்குத் தரலோ இல் 88

எனத் தந்தையும், தமையனாரும் மகள் மறுத்து விடுகின்றனர். மேலும், தன்னை வணங்காதார் எத்தகையோராயினும் அவர்கட்கும் மகட் கொடுத்தல் இல்லை.

வேம்பும் ஆரும் போந்தையும் மூன்றும்

மலைந்த சென்னியர், அணிந்த வில்லர்,

கொற்ற வேந்தர் வாரினும், தன்தக

வணங்கார்க்கு ஈகுவன் அல்லன் 89

முப்பெரு வேந்தர்க்கும் கூட அவர் வணங்காராயின் அவர்க்கு மகட் கொடுப்பதில்லை. மகள் மறுத்த ஏதுவாய் இருபெரு வீரர்களிடையே போர் நிகழ்தலும் உண்டு.

வேட்டட வேந்தனும் வெஞ்சினத் தனனே

கடவன கழிப்பு இவள் தந்தையும் செய்யான்

ஒளிறு முகத்து ஏந்திய வீங்குதொடி மருப்பின்

களிறும் கடிமரம் சேரா் சேர்ந்த

ஒளிறுவேல் மறவரும் வாய்மூழ்த் தனரே

இயவரும் அறியாப் பல் இயம் கறங்க,

அன்னோ, பெரும் பேதுற்றன்று, இவ் அருங்கடி மூதூர் 90

என மகள் மறுத்தமை ஏதுவாக மூதூரில் நேர்ந்த போர் நிகழ்ச்சி குறிக்கப்படுகிறது. இதனை, 'மகட்பாற் காஞ்சி", 'மகண்மறுத்து மொழிதல்" என வழங்குவர்.

மகளைக் கொடுக்கத் தந்தை முதலியோர் முன் வந்த போது, வேண்டாம் என மறுத்துவிடும் தலைவரும் உளர். பாரி மகளிரைத் தம்முடன் கொண்டு சென்று கபிலர், விச்சிக்கோன், இருங்கோவேள் ஆகியோர் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டுதலும், அவர் ஒருப்படாது மறுத்தலும் ஆகிய புற நானூற்றுச் செய்திகள் இதற்குச் சான்றாம். ஆகவே மகட் பேசி மணம் முடிக்கும் முறை தொரியவரும்.

திருமணம் என்பது வாழ்க்கையில் மாற்ற முடியாத ஒரு நிகழ்ச்சி. இருவரும் ஒருமனப்பட்டாராய்ச் சிறந்து வாழ்தலே மணவாழ்க்கை. உடலால் இருவராயினும் உள்ளத்தால் ஒருவரே.

கண்டல் வேலிய ஊர் அவன்

பெண்டு என அறிந்தன்று பெயர்த்தலோ அரிதே! 91

என்பதனால் ஒருவனும் ஒருத்தியும் பிரியா வாழ்க்கை பெற்று உடன் வாழ்தலே சிறப்பாகக் கொள்ளப் பெற்றது.

திருமணம் விழாப் போன்ற ஒரு சிறப்பான நிகழ்ச்சி. 'வதுவை விழவு" என்று குறிக்கப்படுகிறது. இது மறக்கமுடியாத ஓர் இனிய நிகழ்ச்சி.

எண்ணு முறை நிறுத்த பண்ணினுள்ளும்

புதுவது புனைந்த திறத்தினும்

வதுவை நாளினும், இனியனால் எமக்கே 92

என இனிமைக்கு வதுவை நாள் எடுத்துக்காட்டப்படுகிறது. வளர்பிறை நாளில், உதய காலத்தில், தீய கோள்களின் சேர்க்கையின்றி நற்கோள்கள் பயின்றிருக்கும் காலமே திருமணத்திற்கு உரிய காலமாகக் கொள்ளப்படுகிறது. நன் நிமித்தங்கள் வாய்க்கப் பெற்றுச் சந்திரன் உரோகிணி முதலிய சுப நட்சத்திரங்களுடன் கூடிய

நாளாகவும் இருக்க வேண்டும். வேங்கை மலர்தலும் மணநாளுக்கு உரிய காலமாகிறது.

எந்தை வந்து உரைத்தனனாக, அன்னையும்

நல் வேங்கையும் மலர்கமா இனி என

என் முகம் நோக்கினள் 93

என்பதில் இக்குறிப்பைக் காணலாம்.

மணநாள் குறித்தல்

மணநாளுக்கு ஏற்ற முகூர்த்தம் குறிப்பதற்குக் கணியனை (சோதிடனை) முன்னிட்டுச் சான்றவர்களுடன் கூடி மணமகள் இல்லத்திற்கு வருகின்றனர். இச்செய்தியை,

நெறி அறி செறி குறி புரிதிரிபு அறியா அறிவனை

முந்துறீஇ,

தகை மிகு தொகை வகை அறியும் சான்றவர் இனமாக,

வேய் புரை மெந்தோட் பசலையும் அம்பலும்,

மாயப் புணர்ச்சியும், எல்லாம் உடன் நீங்க,

சேய் உயர் வெற்பனும் வந்தனன்

பூ எழில் உண்கணும் பொலிகமா, இனியே! 94

என்று தோழி தலைவன் மணநாள் குறித்தற்கு வந்தமையைத் தலைவிக்குக் கூறுகிறாள். நூல் நெறியாலே அறிந்த இருவரும் கூடுதற்கு ஏதுவாகிய முகூர்த்தம் வேறுபட்டுத் தப்புதலை ஒரு காலத்தும் அறியாத கணியை முன்னிட்டு, அழகு மிகுகின்ற தொகுத்துக் கூறுதலையும் வகுத்துக் கூறுதலையும் அறியும் சான்றவர் தனக்குச் சுற்றமாக, உயர்ந்த மலையினை உடையவனும் வந்தான் என நச்சினார்க்கினியர் மேற்குறித்த பாடற்பகுதிக்கு எழுதியுள்ள உரையும் கூர்ந்து நோக்கத்தகும்.

பாரிசம் கொடுத்தல்

தலைவன் மணப்பெண்ணிற்குப் பாரிசம் கொடுத்தல் மரபு.

அசையினள் இருந்த ஆய்தொடிக் குறுமகள்,

நலம்சால் விழுப் பொருள் கலம் நிறை கொடுப்பினும்

பெறல் அருங்குரையள் 95

என்னும் அடிகளாலும்

முழங்குகடல் முழவின் முசிறி அன்ன

நலம்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்,

புரையர் அல்லோர் வரையலள், இவள் 96

என்னும் அடிகளாலும் பொன் முதலிய சிறந்த பொருள்களைப் பாரிசமாகக் கொடுக்கின்றமை தொரியவரும்.

எக்கர் ஞாழல் மலர் இல் மகளிர்

ஒண்தழை அயரும் துறைவன்

தண்தழை விலை, என, நல்கினன் நாடே 97

என நாட்டையே மணப்பெண்ணுக்குப் பாரிசமாகக் கொடுத்து விடுகிறான் ஒருவன்.

சிலம்பு கழி நோன்பு

திருமண நிகழ்ச்சிக்கு முன்பாகத் தலைவியின் காலில் அணிந்திருக்கும் சிலம்பைக் கழற்றுதற்கு ஒரு சடங்கு நிகழ்த்தப்படும். இதனைச் ‘சிலம்பு கழி நோன்பு“ என்பர். இந்தச் சடங்கு தன் இல்லத்தில் நிகழ வேண்டும் என்று தாயார் விரும்புகின்றனர். உடன்போக்கில் செல்லும் தலைவியர்க்கு இந்நோன்பும் மணவினையும் தலைவனது இல்லத்திலேயே பெரும்பாலும் நிகழ்ந்து விடும்.

அதர் உழந்து அசையின் கொல்லோ-ததர்வாய்ச்

சிலம்பு கழீஇய செல்வம்

பிறருழைக் கழிந்த என் ஆயிழை அடியே 98

என்னும் அடிகளாலும்

நும்மனைச் சிலம்பு கழீஇ யயாரினும்

எம்மனை வதுவை நன்மணம் கழிக எனச்

சொல்லின் எவனோ மற்றே-வென்வேல்,

மையற விளங்கிய கழலடிப்

பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே? 99

என மகட் போக்கிய தாய்மார் பேசுவதிலிருந்து, அவர்களின் விருப்பம் புலனாகும். இங்ஙனமே மகளை உடன்போக்கில் பிரிந்த தாய்மார் பேச்சுக்களில் இச்சிலம்பு கழி நோன்பும் குறிக்கப்படுதலினால், இது சிறப்பாகப் போற்றப்படும் ஒரு சடங்கு ஆகும்.

உடன் போக்கில் சென்ற தலைவி தன் காலடிச் சிலம்போசையால் தாய் தன் போக்கைத் தொரிந்து கொள்வாளோ என்று அஞ்சி, தானே தனது சிலம்பைக் கழற்றி வைத்துவிட்டுக் காதலித்த காளையுடன் நடந்து சென்று விடுகிறாள்.

அரி பெய்து பொதிந்த தொரிசிலம்பு கழீஇ

யாய் அறிவுறுதல் அஞ்சி

வேய் உயிர் பிறங்கல் மலை இறந்தோளே 100

என்று வரும் செவிலித்தாயின் கூற்றிலிருந்து மேற்குறித்த செய்தியைக் கொள்ளலாம். இவற்றிலிருந்து கன்னிப்பருவத்தில் அணியப் பெற்ற சிலம்பு கழற்றப்பட்டு மணவினைக்கு முன் வேறு சிலம்பு அணிவர் என அறிய முடிகிறது.

மணமகளின் பெற்றோர் மது அருந்தி, வீட்டை அலங்காரித்து, மணலைக் குவித்து, 'எமது மகளுக்குத் திருமணம் செய்ய நிச்சயித்துள்ளோம்" என்னும் செய்தி கூறித் திருமணத்தின் முன்னர்ச் செய்யப்படும் திருமண உறுதி விழா ஒன்றும் நிகழ்த்தப்படுகிறது.

நனைவிளை நறவின் தேறல் மாந்தி

புனை வினை நல்இல் தருமணல் குவைஇ

பொம்மல் ஓதி எம்மகள் மணன் என,

வதுவை அயர்ந்தனர் நமரே 101

என மண அறிவிப்புச் செய்தமையை அறிவிக்கின்றாள் தோழி. அது கேட்ட தலைவி, 'அந்த மண நாள் விரைவில் வந்து எய்தட்டும் நாம் கை கூப்பி இல்லுறை தெய்வத்திற்குப் பலிக்கடன் செலுத்துவோம்" என்று கூறுகிறாள்.

திருமணத்தை முன்னிட்டு இல்லுறை தெய்வங்களுக்குச் சிறப்புச் செய்தலை இத் தலைவியின் கூற்றால் உணர்கிறோம்.

இன்தீம் பலவின் ஏர்கெழு செல்வத்து

எந்தையும் எதிர்ந்தனன், கொடையே் அலர்வாய்

அம்பல் ஊரும் அவனொடு மொழியும்

சாய் இறைத் திரண்ட தோள் பாராட்டி,

யாயும், 'அவனே" என்னும் யாமும்

'வல்லே வருக, வரைந்த நாள்!" என

நம் இறை மெல்விரல் கூப்பி,

இல்உறை கடவுட்கு ஆக்குதும் பலியே 102

என்பது தலைவியின் கூற்றாகும்.

புது மணல் பரப்புதல்

திருமணப் பந்தலிலே நல்ல புதுமணல் பரப்பியிருக்கின்றனர். மண மனையில் எங்கும் நல் விளக்குகளை வைத்துள்ளனர். மாலைகளைத் தொங்க விடுகின்றனர். ஆயர் திருமணத்தின் முன் அவர் தம் இல்லத்தைச் செம்மண்ணால் பூசிப் புதுக்குதலும், எருமைமாடு அளித்தலும் குறிக்கப்பட்டிருக்கிறது.

தருமணல் தாழப் பெய்து, இல் பூவல் ஊட்டி,

எருமைப் பெடையொடு, எமர் ஈங்கு அயரும்

பெருமணம் 103

என்கிறாள் ஆயமகள். இதனால் மண அலங்காரமும், பிற நடைமுறை நிகழ்ச்சிகளும் அவரவர் சமுதாயப் பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் சிறிது மாறுபட்டிருந்தது எனலாம். பொதுவாகத் திருமண இல்லம் நறுமணப் பொருள்களால் பொலிந்து விளங்கும்.

பைந்தாது அணிந்த போது மலி எக்கர்

வதுவை நாற்றம் புதுவது கஞல 104

இங்கே வதுவை நன்மணம் மணல் மேட்டில் சிறந்திருந்தமை குறிக்கப்பெற்றுள்ளது.

திருமணத்திற்குச் சுற்றத்தார் வந்து கூடுகின்றனர். சுற்றமும் நட்பும் சூழ மணவினை தொடங்கப்படுகிறது. முழவு முதலிய இன்னிசைக் கருவிகள் முழங்குகின்றன.

சுடுபொன் அன்ன கொன்றை சூடி

டி புகுவனர் போல் மள்ளரும் உடைத்தே 105

என்னும் அடிகளாலும்

முழவு முகம் புலரா விழிவுடை வியல் நகர்

மணன் இடையாகக் கொள்ளான் 106

என்னும் அடிகளாலும்

மணமனைத் ததும்பும் நின் மண முழவந்து எடுப்பும் 107

மணமனை புகுவார் மலர் சூடி, நல்லாடை புனைந்து வருதலை அறிந்து கொள்ள முடிகிறது.

மணமனை வருவார்க்கு உண்டி அளிக்கப்படுகிறது. உழுந்து கலந்து ஆக்கிய சோற்றை மண நாளில் வழங்குவதாக அக நானூற்றின் 86 ஆம் பாடல் குறிப்பிடுகிறது. ஆனால் 136 ஆம் அகப்பாட்டு இறைச்சியொடு கலந்த வெண்சோற்றைக் கொடுப்பதாகக் கூறுகிறது. ஆக மணவினையில் உழுத்தஞ்சோறும் இறைச்சியுடன் கலந்து புழுக்கின நெய் கலந்த வெண் சோறும் படைக்கின்றமையை அறிய முடிகிறது. இங்ஙனம் உண்டியளித்தல், ‘பெருஞ்சோற்று அமலை“ எனப்படும்.

வதுவை நீராடல்

திருமணத்தில் முதற்கண் கடவுளைப் பேணிப் பின் மணமகளுக்கு வதுவை நீராட்டம் புரிகின்றனர். இந்நீராட்டு, ‘வதுவை நன்மணம்“ என்றும் குறிக்கப்படுகிறது. நீராட்டுவோர் மகப்பேறு வாய்க்கப்பெற்ற நான்கு மகளிர். இவர்கள், ‘கற்பின் வழுவாதபடி கணவனைப் பேணும் சிறந்த மனைவியாகுக“ என்று வாழ்த்தி நீராட்டுவர். நீராட்டுதற்குரிய மஞ்சள் நீர் முதலியவற்றையும் வேறு மங்கலப் பொருள்களையும் சுமங்கலிகளுக்கு முதுபெண்டிர் தந்து உதவுவர். இந்த மஞ்சன நீரில் பூவும் நெல்லும் கலந்து காணப்படும். அறுகம்புல்லின் கிழங்காகிய பாவையையும் குளிர்ந்த நறுமணப் பூமுகையையும் வெண்ணூலால் சேர்த்துக் கட்டி அவளுக்கு அணிவர். அவள் அழகிய நல்லாடை புனைந்து திகழ்வாள். மணப்பெண்ணின் கூந்தல் முல்லை முதலிய மணமலர்களால் புதுமணம் பெற்று விளங்கும்.

முகை வாய் திறந்த நகைவாய் முல்லை

கடிமகள் கதுப்பின் நாறி 108

என்பது மணப்பெண்ணின் கூந்தல் மணத்தைப் பாராட்டிக் கூறும் செய்தியாகும்.

கணவனுடன் மணவறையில் நாணம் மேலிடத் தலைமகள் வீற்றிருப்பாள். ஆனால், இவர்களோ களவிற் புணர்ந்த காதலர்களாம்.

மணப்பு அருங் காமம் புணர்ந்தமை அறியார்,

தொன்று இயல் மரபின் மன்றல் அயர,

பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி,

நொதுமல் விருந்தினம் போல, இவள்

புது நாண் ஒடுக்கமும் காண்குவம் யாமே 109

என்னும் தோழி பேச்சில் தலைவி மணவறையில் வீற்றிருக்கும் நாணுடைக் கோலம் காட்சி தருகிறது.

பரத்தையிற் பிரிந்த தலைமகன் விடுத்த தூதைக் கண்டு ஒரு தலைவி பேசும் பேச்சிலிருந்து, மணக்காலத்தில் தீவேட்டனரோ என்றும் கருத இடமுண்டு. தலைவனுடைய தூதுவனைக் கண்ட தலைவி, 'அவன் என்னை மணந்த காலத்து இருந்த அன்புடை நிலையில் சிறிதும் மாறாமல் நாம் இருக்கின்றோம். நெய்யைப் பெய்த தீயைப் போல நாம் அவனை ஏற்றுக் கொள்வோம்" என்று பேசுகிறாள்.

புல்வீழ் இற்றிக் கல்இவர் வெள்வேர்

வரை இழி அருவியின் தோன்றும் நாடன்

தீதுஇல் நெஞ்சத்துக் கிளவி நம் வயின்

வந்தன்று - வாழி, தோழி!" - நாமும்

நெய் பெய் தீயின் எதிர்கொண்டு,

'தான் மணந்தனையம்" என விடுகம் தூதே 110

மணக்காலத்து நிலைமையில் தான் உள்ளமை கூறி, 'நெய் பெய்தீயின் எதிர் கொள்வோம்" என்றலின், இது மணவினையின் பகுதியாக அமைந்த எரிவேட்டலாகும் போலும்.

தேறல் அருங் கடவுள் முன்னர்த் தேற்றி

மெல்இறை முன்கை பற்றிய சொல் இறந்து

ஆர்வ நெஞ்சம் தலைத்தலைச் சிறப்ப, நின்

மார்பு தருகல்லாய் 111

என வரும் அகநானூற்றுத் தலைவியின் பேச்சை நோக்கும் போது, தீக்கடவுள் முன்னாகப் பிரியாது என்றும் ஏற்றுக் கொள்வதாக உறுதி உரைத்துத் தலைவியின் கையைப் பற்றுதல் உண்டு என்பது தொரியவருகிறது.

திருமணத்தின் அறிகுறியாக இப்பொழுது மணப்பெண்ணிற்கு மணமகன் கட்டும் தாலி போன்று ஏதேனும் அணியும் வழக்கம் முன்பு இருந்ததா என்று வெளிப்படையாகத் தொரியவில்லை. ஆய் என்னும் மன்னனைக் குறித்து முடமோசியார் பாடிய 127 ஆம் புறப்பாட்டில் அவன் தன்பால் உள்ள பொருள்களையெல்லாம் இரப்போர்க்கு ஈந்தான் என்று குறிப்பிடுகின்றார். அவன் மனைவியாரிடம் எவ்வகையான அணிகலன்களும் இல்லை. ஆனால், அவர்களிடம் ‘ஈகை அரிய இழை“ ஒன்று மட்டுமே எஞ்சியிருந்தது என்கிறார். இத்தொடருக்குப் பழைய உரைகாரர், ‘கொடுத்தற்கு அரிய மங்கலிய சூத்திரத்தை அணிந்த மகளிர்“ என்று பொருள் தருவர்.

எல்லாம் இழந்து மயானத்தில் மகனை அடக்கம் செய்ய நின்ற சந்திரமதியை நோக்கி, ‘நீ பொருள் இல்லை என்று சொல்வது பொய் உன் கழுத்திலிருக்கும் தாலியைக் கொடுப்பது தானே“ என்று கேட்கிறானாம் அரிச்சந்திரன். கணவனுக்கு அன்றிப் பிறர் கண்ணுக்குப் புலனாகாத தாலியுடையளாதலின், அவனே அரிச்சந்திரன் என்பதைத் தொரிந்து கொள்கிறாள். சந்திரமதியிடம் எல்லா அணியும் இல்லாத காலத்தும் தாலி ஒன்று மட்டும் விளங்கியது என அரிச்சந்திரன் சாரிதம் உரைக்கும் நூல்கள் கூறும். 127 ஆம் புறப்பாட்டில் ‘ஈகை அரிய இழை“ என்பது தாலி போன்ற நிலையில் அமைந்த ஓர் அடையாளப் பொருளாக இருக்குமா என்பது ஆராய்தற்குரியது.

நெடுநல்வாடையில் அரசனைப் பிரிந்த நிலையில் தனியே படுக்கையில் கிடந்த அரசியைப் பற்றிக் கூறிவரும் செய்திகளில், ‘முத்தாரங்களைச் சுமந்து அழகு பெற்றுத் தோன்றிய அவ்வரசியின் மார்பிடத்தே திருமாங்கல்யம் மட்டும் அசைந்து கிடப்பதேயன்றி வேறோர் அணியும் காணக்கூடவில்லை என்கிறார் கவிஞர்.

ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்துப்

பின் அமை நெடு வீழ் தாழ 112

எனவரும் நெடுநல்வாடை அடிகளுக்கு, முன்பு முத்தாற் செய்த கச்சுச் சுமந்த பருத்த முலையினையுடைய மார்பிடத்தே இப்பொழுது குத்துதல் அமைந்த நெடிய தாலி நாண் ஒன்றுமே தூங்க, என வரும் நச்சினார்க்கினியர் தரும் உரை விளக்கத்தால், 'தாலி" அணி எக்காலத்தும் நீக்கக் கூடாத ஒரு சின்னம் என்னும் கருத்து இனிது புலப்படும்.

மணநிகழ்ச்சிகளில் மணமகளின் பெற்றோர் 'பெருமனைக்கு உரிமையுடையவளாகுக" என்று வாழ்த்தி, அவளை மணமகனுக்கு அளிப்பர். பின்னர் இரவில் மணமக்கள் ஓர் அறையில் உடன் உறைந்து இன்புறுவர்.

புதுமணப்பெண் புக்ககம் சென்றபின், நல்ல நறுஞ்சுவை உணவுகளை ஆக்கிக் கணவனை உண்பிக்கின்றாள். முதல் முதல் மணப்பெண் பாலை உலையாக வைத்துச் சோறு சமைத்தல் முறை. அவள் சமைத்துப் படைக்கும் பாலடிசிலைத் தொட்டு உண்டு தலைவன் அருந்தும் முதற்பானகமும் ஒரு சடங்கே ஆகும்.

துவரப் புலர்ந்து துமலர் கஞலி,

தகரம் நாறும் தண்நறுங் கதுப்பின்

புதுமண மகடூஉ அயினிய கடிநகர்ப்

பல்கோட்டு அடுப்பில் பால் உலை இ£இ,

கூழைக் கூந்தற் குறுந்தொடி மகளிர்

பெருச்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்துப்

பாசவல் இடிக்கும் 113

என்னும் அடிகளாலும்

இடுமுள் வேலி முடக்கால் பந்தர்,

புதுக் கலத்து அன்ன செவ் வாய்ச் சிற்றில்,

புனை இருங் கதுப்பின் நின்மனை யோள் அயர,

பாலுடை அடிசில் தொடீஇய, ஒருநாள்,

மாவண் தோன்றல்! வந்தனை சென்மோ 114

என வரும் அகப்பாடல் பகுதிகளால் தலைவன் மணப்பெண் படைக்கும் அடிசில் தொட்டு உண்ணும் சடங்கு உண்மை என உணரலாகும்.

மனைக்கு ஒளி செய்து விளங்குபவள் இல்லாள். ஆகவே, அவள், 'மனைக்கு விளக்கு ஆகிய வாணுதல்" என்று போற்றப்படுகின்றாள்.

ஒண்சுடர்ப் பாண்டில் செஞ்சுடர் போல

மனைக்கு விளக்கு ஆயினள் மன்ற - கனைப்பெயல்

பூப்பல அணிந்த வைப்பின்

புறவு அணி நாடன் புதல்வன் தாயே 115

எனக் குலவிளக்காம் புதல்வனைப் பெற்று, அவள் அவனது குடிக்கு விளக்காய் இலங்குகின்றாள். கணவன் மனைவியர் உயிர்க்கு உயிராய் அமைந்துள்ளனர். கணவனுக்குக் கற்புடை மனைவியர் தோளைச் சேர்தலினும் சிறந்த பேறு வேறு இல்லை.

இயல் தொகுப்பு

இலக்கியத்தில் சடங்குகள் என்னும் இவ்வியலில் இருந்து பெறப்பட்ட கருத்துகள் பின்வருமாறு தொகுத்தளிக்கப்படுகின்றன.

பண்டைத் தமிழர் நடத்திய இறைவழிபாடு குறித்த விழாச் சடங்கு அதாவது பௌர்ணமி நாளாகிய திருவாதிரை நாளில் சிவபெருமானுக்குச் சடங்கு செய்தமை குறித்த செய்திகளைப் பாரிபாடலில் பாரிமேலழகர் தரும் உரை மூலம் தெளிவாகப் பெறமுடிகிறது.

அம்பாவாடல் எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் பாவை நோன்பு குறித்த செய்திகளைத் திருப்பாவை மூலமாகவும் திருவெம்பாவை மூலமாகவும் தெளிவாகப் பெறமுடிகிறது. இதனைத் தைந்நீராடல் எனவும் குறிக்கின்றனர். மார்கழி மாதத்தில் பெண்கள் நோன்பு நோற்று நீராடல் குறித்த குறிப்புகளைப் பெறமுடிகிறது.

வேண்டுதல் சடங்கு குறித்த செய்திகளைத் தெளிவாக இவ்வியலின் மூலம் தொரிந்து கொள்ள முடிகிறது. குழந்தைப் பேற்றின் பெருமையையும் குழந்தைப்பேறு இல்லாமையின் இழிவையும் கருவுற வேண்டும் சடங்காக புறநானூற்றுப் பாடல் அடிகள் மூலம் தெளிவு பெற முடிகிறது. கருவுற்ற பெண் நல்ல முறையில் குழந்தை பெற வேண்டும் என்று பாற்சோறு படைத்த குறிப்புகளை மதுரைக் காஞ்சி மூலமும் நற்றிணை மூலமும் பெறமுடிகிறது. விரிச்சி கேட்டல் என்னும் நிகழ்வும் சடங்காகவே

நிகழ்கிறது. இதனை நற்றிணைப் பாடல் மூலம் தொரிந்து கொள்ள முடிகிறது. குழந்தைக்குப் பெயாரிடுதல், புலிப்பல் தாலி அணிந்த தன்மை குறித்தும் எட்டுத்தொகை நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் செய்திகள் சுட்டிக் காட்டப்படுகின்றன.

திருமணம், மடல் ஏறுதல் குறித்த செய்திகளும் இவ்வியலின் மூலம் தெளிவாகப் பெறப்பட்டன.

சான்றெண் விளக்கம்

1. பாரிபாடல் : 11 : 75-78
2. புறநானூறு : 224 : 5-9
3. பாரிபாடல் : 11 : 81-91
4. புறநானூறு : 188
5. பாரிபாடல் : 8 : 106-108
6. ஐங்குறுநூறு : 257
7. மதுரைக் காஞ்சி : 604-610
8. நற்றிணை : 370: 2-4
9. நற்றிணை : 380 : 1-4
10. மதுரைக் காஞ்சி : 600 - 603
11. நற்றிணை : 40
12. புறநானூறு 100: 10,11
13. ஐங்குறுநூறு : 403:3
14. கலித்தொகை : 75 : 24-25
15. கலித்தொகை : 81 : 35
16. பொருநராற்றுப்படை : 129 -132
17. புறநானூறு : 374:9
18. குறுந்தொகை : 161: 3-4
19. அகநானூறு : 7: 17-22

20. புறநானூறு : 77 : 1-8

21. கலித்தொகை : 85 : 8-11

22. கலித்தொகை : 80:10-11

23. கலித்தொகை : 80 :14-15

24. கலித்தொகை : 80 : 18-19

25. கலித்தொகை : 84 : 5-7

26. கலித்தொகை : 82 :4-5

27. மதுரைக் காஞ்சி : 618-619

28. புறநானூறு 24:23-25

29. கலித்தொகை : 5 : 9

30. கலித்தொகை : 94 : 5-6

31. புறநானூறு 312 :1-2

32. கலித்தொகை : 149 : 4-5

33. பாரிபாடல் : 11 : 88

34. கலித்தொகை : 94 : 41-43

35. கலித்தொகை : 56 : 32-34

36. குறுந்தொகை : 156 : 1-5

37. பாரிபாடல் : 9 : 25, 26

38. முல்லைப்பாட்டு : 35-36

39. மலைபடுகடாம் : 325-327

40. குறுந்தொகை : 33

41. திருமுருகாற்றுப்படை : 181,182

42. குறுந்தொகை : 7 : 1,2

43. புறநானூறு : 312 : 3-6

44. கலித்தொகை : 59 :12-13

45. நற்றிணை : 80:6-8

46. ஐங்குறுநூறு : 84:3-5

47. பாரிபாடல் : 6 :11-13

48. பாரிபாடல் : 11 : 87

49. கலித்தொகை : 27 :19-20

50. அகநானூறு : 269:14-20

51. நற்றிணை : 272 : 2-3

52. நற்றிணை : 22 :1-7

53. பாரிபாடல் : 11 :115 -121

54. பிங்கலநிகண்டு : 1369

55. பாரிபாடல் : 19 : 85-94

56. பாரிபாடல் : 11 : 122-123

57. கலித்தொகை : 94 : 37-43

58. கலித்தொகை : 62: 14-15

59. அகநானூறு : 273:15-17

60. நற்றிணை : 109:1-2

61. ஐங்குறுநூறு : 419

62. குறிஞ்சிப்பாட்டு : 19-22

63. குறுந்தொகை : 40

64. குறுந்தொகை : 298 : 6

65. அகநானூறு : 97 : 9-10

66. அகநானூறு : 152:4, 208 : 3

67. நற்றிணை : 288 : 4-7

68. அகநானூறு : 98 : 5-10

69. அகநானூறு : 195 :12-14

70. நற்றிணை : 47:8-11

71. ஐங்குறுநூறு : 245 : 1-3

72. ஐங்குறுநூறு : 247 : 2-3

73. நற்றிணை : 268 : 8-9

74. நற்றிணை : 282 :13-16

75. ஐங்குறுநூறு : 248

76. ஐங்குறுநூறு : 249:1-2

77. ஐங்குறுநூறு : 250

78. அகநானூறு : 195 :14-19

79. குறுந்தொகை :17

80. குறுந்தொகை : 14 : 4-6

81. கலித்தொகை : 58 : 20-23

82. கலித்தொகை : 138 : 8-11

83. கலித்தொகை : 141 : 22-25

84. அகநானூறு : 322 : 3-4

85. குறுந்தொகை : 51

86. அகநானூறு : 282 : 10-12

87. புறநானூறு 343 :12,13

88. புறநானூறு 345 : 14

89. புறநானூறு 338 : 6-9

90. புறநானூறு 336 : 1-7

91. நற்றிணை : 74 :10,11

92. அகநானூறு : 352 : 15-17

93. நற்றிணை : 206 : 6-8

94. கலித்தொகை : 39 : 46-51

95. அகநானூறு : 280 : 4-6

96. புறநானூறு 343 : 5-12

97. ஐங்குறுநூறு : 147

98. நற்றிணை : 279:9-11

99. ஐங்குறுநூறு : 399:1-5

100. அகநானூறு : 321 : 15-17

101. அகநானூறு : 221 : 1-4

102. அகநானூறு : 282 :11-18

103. கலித்தொகை : 114 :12-14

104. அகநானூறு : 25 : 4-5

105. ஐங்குறுநூறு : 432 : 2-3

106. அகநானூறு : 397 : 3-4

107. கலித்தொகை : 70:10

108. அகநானூறு : 244 : 4-5

109. அகநானூறு : 112 : 15-19

110. குறுந்தொகை : 106

111. அகநானூறு : 396 : 7-10

112. நெடுநல்வாடை : 136 -137

113. அகநானூறு : 141 : 12-18

114. அகநானூறு : 394 : 8-12

115. ஐங்குறுநூறு : 405